பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

25 04 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. மக்களவைக்கு நாளை நடைபெறவுள்ள இரண்டாவது கட்ட வாக்குப்பதிவுக்கான அனைத்து எற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

2. வாக்குவங்கி அரசியலை கருத்தில் கொண்டு காங்கிரஸ் கட்சி செயல்படுவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி குற்றம்சாட்டியுள்ளார்.

3. அனைவரையும் உள்ளடக்கிய தேசத்தை கட்டமைக்க ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டுமென திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தமிழகத்தில் ரேஷன் அரிசி கடத்தலை தடுக்க மாநில அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அஇஅதிமுக-வும் பிஜேபி-யும் வலியுறுத்தியுள்ளன.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தில்லி அணி நான்கு ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைக்கு நாளை நடைபெறவுள்ள இரண்டாவது கட்ட வாக்குப்பதிவுக்கான அனைத்து எற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

12 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 88 தொகுதிகளுக்கு நாளை வாக்குபதிவு நடைபெறுகிறது.

கேரளாவில் மொத்தம் உள்ள 20 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

கர்நாடகாவில் 14, ராஜஸ்தானில் 13, உத்திரபிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா எட்டு, மத்திய பிரதேசத்தில் ஆறு, அஸ்ஸாம் மற்றும் பீகாரில் தலா ஐந்து, மேற்குவங்கம் மற்றும் சத்திஷ்கரில் தலா மூன்று, திரிபுரா, மணிப்பூர் மற்றும் ஜம்மு-கஷ்மீரில் தலா ஒரு தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது.

இதற்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறைவடைந்த நிலையில், வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான பொருட்களை எடுத்துச் செல்லும் பணி தொடங்கியுள்ளது.

இந்த தொகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும், வாக்குச்சாவடிகள் சி சி டி வி கேமரா மூலம் கண்காணிக்கப்படுவதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதனிடையே மூன்றாவது கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரடைந்துள்ளது.

இந்நிலையில் மக்களவைக்கு நான்காவது கட்டமாக தேர்தல் நடைபெறும் 96 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

[]<<<>>>[]

வாக்குவங்கி அரசியலை கருத்தில் கொண்டு காங்கிரஸ் கட்சி செயல்படுவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி குற்றம்சாட்டியுள்ளார்.

சத்திஷ்கரில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், ஆட்சி அதிகாரத்துக்காக காங்கிரஸ் கட்சி தவறான கொள்கைகளை பின்பற்றுவதாகத் தெரிவித்தார்.

காங்கிரஸ் ஆட்சியின்போது நிர்வாகத்தில் நிலவிய அலட்சியம் காரணமாகவே நக்ஸல் தீவிரவாதம் அதிகரித்ததாக அவர் கூறினார்.

நாடு தற்சார்பு அடைவதை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் விரும்பவில்லை என்று திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

[]<<<>>>[]

அனைவரையும் உள்ளடக்கிய தேசத்தை கட்டமைக்க ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டுமென திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பில் அவரது உரை வாசிக்கப்பட்டது.

பின்தங்கியவர்களுக்கு அதிகாரம் அளிப்பது தமிழகத்தில் நீண்டகாலமாக கடைபிடிக்கப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

இந்த பயணம் தொடரும் என்றும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் ரேஷன் அரிசி கடத்தலை தடுக்க மாநில அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அஇஅதிமுக-வும் பிஜேபி-யும் வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி சமூக வலைளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், கோவில்பட்டியில் ரேஷன் அரிசி கடத்தலுக்கு எதிரான செயல்பட்டவர் வீட்டில் பெட்ரோல் குண்டு வீசப்பட்ட சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாகக் கூறியுள்ளார்.

நியாயவிலைக்கடை அரிசி வெளி மாநிலங்களுக்கு கடத்தப்படுவது திமுக ஆட்சியில் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் மேலும் நிகழா வண்ணம் மாநில அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

[]<<<>>>[]

பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கோவிட்பட்டி சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுவோரை கைது செய்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென திரு அண்ணாமலை மாநில அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

தனியார் பள்ளி மாணவர் சேர்க்கையில் ஏழை எளிய மாணவர்களுக்கு 25 சதவீத இடஒதுக்கீடு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு செல்வப்பெருந்தகை வலியுறுத்தியுள்ளார்.

கல்வி உரிமைச் சட்டத்தின்படி தமிழகத்தில் உள்ள எட்டாயிரம் தனியார் பள்ளிகளில் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஏழை எளிய மாணவர்களுக்கு இந்த ஒதுக்கீட்டின் கீழ் இடங்களை ஒதுக்க வேண்டுமென அவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

எந்த நோக்கத்திற்காக கல்வி உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கம் முழுமையாக நிறைவேற மாநில கல்வித்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று திரு செல்வப்பெருந்தகை கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

வடலூர் சத்யஞான சபை வளாகத்தில் பன்னாட்டு மையம் அமைக்கும் பணியை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை தமிழக அரசு நிறுத்தி வைக்க வேண்டுமென பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கட்டுமான பணிகள் நடைபெறும் பகுதியில் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த கட்டுமானங்கள் உள்ளதா என்பதை கண்டறிய வல்லுநர் குழுவை அமைத்து உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு வரவேற்கத்தக்கது என்று கூறியுள்ளார்.

இந்த விஷயத்தில் தமிழக அரசு தமது நிலையை மாற்றிக்கொண்டு வள்ளலார் பக்தர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று டாக்டர் அன்புமணி கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

மே தினம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் அனுமதி பெற வேண்டுமென தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரதா சாஹு தெரிவித்துள்ளார்.

தற்போது தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ள நிலையில், இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு தேர்தல் ஆணையத்தின் அனுமதி தேவை என்று அவர் கூறியுள்ளார்.

இதற்கான அனுமதிகளை சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அதிகாரிகள்தான் வழங்க வேண்டும் என்பதால் இது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்றுமாறு மாவட்ட நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக திரு சத்யபிரதா சாஹூ தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

மே தினம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் அனுமதி பெற வேண்டுமென தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரதா சாஹு தெரிவித்துள்ளார்.

தற்போது தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ள நிலையில், இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு தேர்தல் ஆணையத்தின் அனுமதி தேவை என்று அவர் கூறியுள்ளார்.

இதற்கான அனுமதிகளை சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அதிகாரிகள்தான் வழங்க வேண்டும் என்பதால் இது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்றுமாறு மாவட்ட நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக திரு சத்யபிரதா சாஹூ தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப்-இரண்டு மற்றும் இரண்டு-ஏ பதவிகளுக்கான திருத்தப்பட்ட தேர்வு அட்டவணையை வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கான தேர்வு செப்டம்பர் மாதம் 28-ஆம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குரூப்-இரண்டு மற்றும் இரண்டு-ஏ பதவிகளுக்கான பணியிடங்கள் இரண்டாயிரத்து முப்பதாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

குரூப்-நான்கு பதவிகளுக்கான தேர்வு ஜூன் ஒன்பதாம் தேதி நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே குரூப்-ஒன் பதவிகளுக்கு 65 பணியிடங்கள் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது 90 இடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசு பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தின் வடமாவட்டங்களில் இன்று வெப்ப அலை வீசக்கூடும் என்று சென்னை வானிய ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

தென்மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக எமது செய்தியாளரிடம் அவர் தெரிவித்தார்.

*(சவுண்ட்பைட் - செந்தாமரைகண்ணன் ) —37 செகண்ட்*

[]<<<>>>[]

சீனாவின் தென் பகுதியில் உள்ள குவாங்டாங் மாகாணத்தில் கனமழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக நான்கு பேர் உயிரிழந்தனர். பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

[]<<<>>>[]

சில்லறை விற்பனை தொடர்பான உலகளாவிய இரண்டு நாள் உச்சி மாநாடு துபாயில் நேற்று நிறைவடைந்தது.

[]<<<>>>[]

ராமகிருஷ்ண மடத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சுவாமி கௌதமானந்தஜி மகாராஜுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

பனிப்பொழிவு காரணமாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மூடப்பட்ட லே-மணாலி தேசிய நெடுஞ்சாலை, ராணுவ வாகனங்களின் போக்குவரத்திற்காக திறக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஜம்மு-காஷ்மீரின் ரஜௌரி மாவட்டத்தில் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகளால் பொதுமக்கள் ஒருவர் கொல்லப்பட்டது தொடர்பாக 67 பேரிடம் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

[]<<<>>>[]

ஆகாஷ்வாணியின் முதன்மை தலைமை இயக்குநர் திருமதி வசுதா குப்தா மதுராவில் உள்ள ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் நிலையங்களை நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்,

[]<<<>>>[]

கோவை மாவட்டம் முண்டன்துறை தடுப்பணையில் குளிக்கச் சென்ற பள்ளி மாணவர்கள் மூன்று பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

[]<<<>>>[]

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் கடந்த 27 நாட்களில் 94 லட்சம் ரூபாய் உண்டியல் காணிக்கையாக கிடைத்துள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி மாவட்டம் கூவாகம் அருள்மிகு கூத்தாண்டவர் கோவில் சித்திரைத் திருவிழா தேரோட்டம் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

சென்னையில் பராமரிப்புப் பணிகள் காரணமாக ஏழு மண்டலங்களில் இன்று முதல் 27-ம் தேதி இரவு வரை குழாய் மூலம் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படவுள்ளதாக சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற குஜராத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தில்லி அணி நான்கு ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

தில்லியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் நான்கு விக்கெட் இழப்புக்கு 224 ரன் எடுத்தது.

225 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி எட்டு விக்கெட் இழப்புக்கு 220 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

ஹைதராபாத்தில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூரு – ஹைதராபாத் அணிகள் மோதுகின்றன.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற முதல்கட்ட அரை இறுதியின் இரண்டாவது ஆட்டத்தில் மும்பை அணி – கோவாவை வென்றது.

கோவாவில் நடைபெற்ற இப்போட்டியில் மும்பை அணி மூன்றுக்கு - இரண்டு என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

[]<<<>>>[]

துபாயில் நடைபெற்று வரும் 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா நேற்று ஒரு தங்கம் மற்றும் மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.